**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 292/ஆ5/2026, நாள். 09/02/2026**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் – ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வேலூர் மாவட்டத்தில் குழந்தைகள் நலன் தொடர்பான ஆய்வு கூட்டம் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்வது– முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை
1. அரசாணை எண்.45, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை நாள்.28.03.2012
2. அரசாணை எண்.66, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை நாள்.19.06.2025

•••••

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி, மத்திய அரசின் 2005 ஆம் ஆண்டுக்கான குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் பிரிவு 17(1)–ன் அடிப்படையில், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்பட்டு இவ்வாணையத்திற்கான தலைவர் மற்றும் 6 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு 18.01.2013 முதல் செயல்பட்டு வருகிறது.

மேலும், மத்திய அரசின் 2005ஆம் ஆண்டுக்கான குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் பிரிவு 13(1)–ன் அடிப்படையில் குழந்தைகளின் பாதுகாப்பை கண்காணிக்கவும் ஆய்வுகள் மேற்கொள்ளவும். ஆணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பார்வை 2ல் காணும் அரசாணையின்படி, இவ்வாணையத்திற்கு ஆணைய தலைவர் மற்றும் 6 உறுப்பினர்கள் நியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டது.

வேலூர் மாவட்டத்தில் 11.02.2026 அன்று குழந்தைகள் நலன் தொடர்பான இல்லங்களில் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து பள்ளித்தலைமையசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

தலைமையாசிரியர்கள்,
(அனைத்து வகை பள்ளிகள்)

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை/தொடக்கக்கல்வி/தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்.